மரவள்ளிக்கிழங்கு நாற்றுகள் கொள்முதல்.

*138 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேரளத்திலிருந்து அதிக விளைச்சல் தரும் ரக மரவள்ளிக்கிழங்கு நாற்றுகளைக் கொள்முதல் செய்ய அரசு திட்டமிட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(முற்பகல் 9.30.)

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (இ) **கேரளாவிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, தமிழ்நாட்டு** விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்ட மரவள்ளி கரணைகள், எம். 4, **எச். 165, எச். 226, நடுக்கண் போன்ற ரகங்கள்—ஆயிரம் ஏக்கார பயிர் செய்வதற்குப் போதுமான கரணைகள் வழங்கப்பட்டுள்ளன.**

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்தக் கரணைகள் எந்த எந்தப் பகுதியில் வழங்கப்பட்டிருக்கின்றன? ஒரு ஏக்கருக்கு எவ்வளவு மகசூல் தரும் என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: குறிப்பாக செங்கல் பட்டு, தென்னாற்காடு, திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற கடலோர மாவட்டங்களில் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த எம். 4, எச். 165, எச். 226, போன்ற ரகங்கள் ஏக்கருக்கு 15 டன்னுக்கு மேலே மகசூல் கொடுக்கக் கூடியவை. இவை பெரும்பாலும் சாகோ, ஸ்டார்ச் தயாரிக்க, தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்தப் படுகின்றன. நடுக்கண் என்ற ரகம் விளைவு குறைவாக இருந் தாலும் நேரிடையாக உண்பதற்குத் தகுதியாக உள்ளது.

திரு. தி. பொன்னுமலை: நமது மாநிலத்திலேயே சேலம் மாவட்டத்தில்தான் இந்த மரவள்ளிக் கிழங்கு அதிகமாகப் பயிரிடப்படுகிறது. நான்காண்டுகளாக மழையில்லை, அதன் காரணமாக விளைச்சலில்லை. அதுபோன்ற மேட்டுப் பகுதியில் பயிரிடுவதற்கு ஏற்ற ரக விதைகளை ஆராய்ச்சி மூலம் கண்டு, அந்தப் பகுதியில் விநியோகிக்க ஏற்பாடு செய்வார்களா?

1975 அக்டோபர் 30]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: சேலம் மாவட்டத்தில் 2 லட்சம் ஏக்கராவில் பயிரிடப்பட்ட மரவள்ளிக்கிழங்கு மொசைக் என்ற வியாதினால் பாதிக்கப்பட்டு விளைவு குறைந்து விட்டது. இது பூச்சி கூட இல்லை. வைரஸ் என்ற வியாதி. இதற்கு மருந்தே கிடையாது. இந்தச் செடிகளை எல்லாம் பிடுங்கி எறிந்துவிட்டு, திரும்பவும் கரணை நட்டால் நன்றாகப் பலன் இருக்கும்.

திரு. கே. என். குமாரசாமி: இதை மானாவாரி பகுதியில் பயிரிடலாம் என்று முன்னால் சொன்னார்கள். மாதத்திற்கு ஒரு தண்ணீர் கொடுத்தாலும் போதும் என்று சொன்னார்கள். ஆனால் அதுபோல செய்கிறபோது பலன் தரவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மானாவாரி என்று சொல்லவில்லை. தண்ணீர் இறைக்க வேண்டும். அதிகத் தண்ணீர் கொள்வதில்லை. பத்து நாளைக்கு ஒரு முறையாவது பாய்ச்சினால் போதும். இடையில் 2 மாதம் தண்ணீர் பாய்ச்சவில்லையென்றாலும், மழை இல்லையென்றாலும் பிழைத்துக்கொள்ளக் கூடிய சக்தி இதற்கு இருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : டாபியோகாவிற்கு வந்திருக்கக்கூடிய மொசைக் என்ற வியாதியைப் போக்க இண்டியன் அக்ரிகல்சுரல் ரிசர்ச் இன்ஸ்டிடியூட்டில் மருந்து கண்டுபிடித்திருப்பதாகச் சொல்கிறார்களே, அவர்களோடு கலந்துபேசி இந்த வியாதியைப் போக்க நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தகவல் தெரிந்து இதற்குப் பதில் சொல்கிறேன்.

திரு. வி. பழனிவேலு: அமைச்சர் அவர்கள் சொல்லும் போது, இந்த நோய் கண்ட செடிகளை அகற்றிவிட்டு, புதிய கிழங்குகளை நட்டால் நன்றாக விளைய வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னார்கள். சேலம் மாவட்டத்தில் ஆராய்ச்சி நிலையம் ஒன்று இருக்கிறது. அவர்கள் இப்போது விதை கொடுக்க ஆரம்பித்தாலும் சேலம் மாவட்டத்திலுள்ள 2 லட்சம் ஏக்கராவுக்கும் கொடுக்க 20 வருஷங்கள் ஆகும். மிகக் குறைந்த

[1975 அக்டோபர் 30

நிலத்தில், மிகக் குறைந்த விதைகளையே அங்கு தயாரிக்கிறார்கள். ஆகவே, வேறு இடங்களில் இருந்தாவது விதைகளை வரவழைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு உறுப்பினர் சேலம் ஆராய்ச்சிப் பண்ணைபற்றி கூறியதை வருத்தத்தோடு ஒப்புக்கொள்கிறேன். சேலம் ஆராய்ச்சி நிலையம் 35 ஏக்கரா வைத்துக்கொண்டு, பத்து ஏக்கராவில் விளைச்சல் செய்து, விதை கொடுத்து வந்தார்கள். அதைக்கொண்டு 2 லட்சம் ஏக்கராவுக்கு விநியோகிக்க முடியாது. ஆகவே, அந்த ஆராய்ச்சி நிலையத்தை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது.

திரு. எஸ். நல்லசாமி: கேரளத்தில் இருந்து ஹை ப்ரீட் விதைகள் வரவழைக்கப்பட்டு தருவதாகச் சொன்னார்கள். நம்மிடமே பர்மா குச்சி, கருப்புக் குச்சி போன்ற ரகங்கள் இருக்கின்றன. இவற்றினால் கிடைக்கக்கூடிய லாபம் எவ்வளவு இருக்கும், கேரளாவில் இருந்து வரவழைத்து கொடுக்கக்கூடிய கரணைகளினால் கிடைக்கக்கூடிய லாபம் எவ்வளவு இருக்கும் என்று சொன்னால் எங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: லாபம் என்பது விலையைப் பொறுத்திருக்கிறது. முன்னால் அதிகமான விலைக்கு விற்றது. இப்போது சற்று விலை குறைவாக இருக்கிறது. அரிசி விலை குறையும்போது மாவள்ளிக் கிழங்கின் விலையும் குறைகிறது. ஆகவே நான் மகசூல் அடிப்படையில் சொல்கிறேன். நமது நாட்டு ரகங்கள் ஏக்கருக்கு மூன்று அல்லது நான்கு டன்கள் தான் விளைகின்றன. ஆனால் கேரளாவில் இருந்து -- கேரள மாநிலம் என்று சொல்லவில்லை — கேரளம், ஆந்திரம், தமிழ் நாடு, கர்நாடகம் ஆகிய நான்கு மாநிலங்களுக்குமாகச் சேர்த்து ஒரு ஆராய்ச்சி நிலையம் கேரளாவில் இருக்கிறது -- அங்கே இருந்து வரவழைத்துக்கொடுக்கப்படுகிற கரணைகள் மூலம் ஏக்கருக்கு இந்த எம். 4, எச். 165, எச். 226—ஆகியவை 15 டன்வரை மகசூல் கொடுக்கிறது.

திரு. க. உரோ. எட்மண்ட்: மரவள்ளிக் கிழங்கு காகிதம் செய்யப் பயன்படுகிறது என்று பேசிக்கொள்கிறார்களே, இது உண்மைதானா?

1975 அக்டோபர் 30]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: மரவள்ளிக் கிழங்கை காகிதம் செய்யப் பயன்படுத்துவதில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாவள்ளிக் கிழங்கை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு அரசாங்கம் ஏதாவது உதவி செய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: நடைமுறையில் —கடந்த வருடத்தில்—அரசாங்கச் செலவில் உதவி எதுவும் செய்யவில்லை. கரணைகளை வரவழைத்துக் கொடுக்கும்போது லாபமும் இல்லாமல், நஷ்டமும் இல்லாமல் விநியோகம் செய்கிறோம்.

திரு. தி. பொன்னுமலை: சேலம் மாவட்டத்திலுள்ள ஆராய்ச்சிப்பண்ணை நில்வாரப்பட்டி என்கிற என்னுடைய கிராமத்தில் தான் இருக்கிறது. ஆனல் சிறிய இடத்தில் இருக்கிறது. அதை விரிவுபடுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: அந்தப் பண்ணை 30 ஏக்கரா குத்தகை நிலத்தில் அங்கே இருக்கிறது. அந்த இடத்திலேயே அதை விரிவுபடுத்த வசதியில்லை. அதை மூடிவிட்டு 250 ஏக்கரா நிலமுள்ள வேறு ஓர் இடத்தில் ஆராய்ச்சிப் பண்ணையைத் தொடங்கியிருக்கிறோம்.

தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி

* 139. வின—திரு. எல். கணேசன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா:

தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: வருத்தத்தோடு சொல்கிறேன்—இல்லை.

திரு. என். கிட்டப்பா: மற்ற மாவட்டங்களுக்கும் உணவினை உற்பத்தி செய்து கொடுக்கிற தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைக் கல்லூரி நிறுவப்பட வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட